செ.வெ.எண்: 13 நாள்: 06.07.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் ரூ.55.32 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.07.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அரிமளம் ஊராட்சி ஒன்றியம், மிரட்டுநிலை ஊராட்சி, மிரட்டுநிலையில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கிராம சேவை மையம் கட்டிட கட்டுமானப்பணியையும், திடக்கழிவு மேலாண்மை குழியில் குப்பைகளை பிரிக்கும் பணியையும், தெற்கு பொன்னம்பட்டியில் அங்கன்வாடி தரம் உயர்த்துதல் திட்டத்தின் கீழ் ரூ.20000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட கழிவறை கட்டுமானப்பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.
மேலும் கீழப்பனையூர் ஊராட்சி, கீழப்பனையூரில் தனிநபர் இல்லக்கழிவறை கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.12000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட கழிவறை கட்டுமானப்பணியையும், கிராம நிர்வாக அலுவலகத்தில் ரூ.50000 மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட கட்டிட சீரமைப்பு பணியையும்,



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம் மிரட்டுநிலை ஊராட்சி, மிரட்டுநிலையில் திடக்கழிவு மேலாண்மை குழியில் குப்பைகளை பிரிக்கும் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.07.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கிராம சேவை மையம் கட்டிட கட்டுமானப்பணியையும், பிளியவயல் ஊராட்சி, வம்பரம்பட்டியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.20.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நாற்றங்கால் பணியையும் என ரூ.55,32,000 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சிப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது கழிவறைகளை தினமும் உரிய முறையில் பயன்படுத்தி சுகாதாரத்தை பேணவும், திடக்கழிவு குழிகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை தனித்தனியாக பிரித்து சேமிக்கவும், நாற்றங்கால்களில் மரக்கன்றுகளை உரிய முறையில் நடவு செய்து பராமரித்து வளர்க்கவும், முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், மேலும் நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெற்குபொன்னம்பட்டி அங்கன்வாடி மையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆகிய இடங்களில் குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவினை சாப்பிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் மாணவ, மாணவிகளின் கல்வி தரத்தை ஆய்வு செய்து அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் சிறப்பான கல்வியை வழங்க ஆசிரியர்களுக்கு உத்தரவிட்டதுடன் மாணவர்களுக்கு உணவினை தரமான முறையில் தயாரித்து வழங்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

..2..



முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மிரட்டுநிலை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலையொட்டி அமைக்கப்படவுள்ள வாக்குச்சாடி மையங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் கீழப்பனையூர் கிராம நிர்வாக அலுவலக வளாகத்தில் மரக்கன்றினை நட்டார்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.எம்.மணிமேகலை, திருமதி.ஏ.திலகவதி, உதவிப்பொறியாளர்கள் திரு.டி.பாலமுருகன், திரு.முகம்மது ரபீக், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**